WWW.KALVIKURAL.COM

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்
மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை – 6.
*கூடுதல் மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்*
*முன்னிலை : முனைவர் ரெ. இளங்கோவன்*

ந.க.எண். 1202 /அ2/ அஇகதி/2012. நாள்: 17.09.2012

| | |
|---|---|
| பொருள் : | அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் – 2011–12 ஆண்டுத் திட்டம் – 6752 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் – அரசாணையில் 6872 பணியிடங்களுக்கான பட்டியல் வெளியிடப்பட்டது – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் உட்படாத 120 பணியிடங்களின் பட்டியல் வெளியிடுதல் – சார்பு |
| பார்வை : | 1. அரசாணை (நிலை ) எண். 212 பள்ளிக் கல்வி (க.செ. 2) துறை, நாள்: 23.12.2011<br>2. அரசாணை (நிலை ) எண். 229 பள்ளிக் கல்வி (க.செ. 2) துறை, நாள்: 04.09.2012 |

*****

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் 2011–12 ஆண்டுத் திட்டத்தில் 6752 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது. பார்வை 1ல் காணும் அரசாணையின் படி அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் சார்பாக 6752 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், மாநில அரசு நிதியிலிருந்து 120 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது. அவ்வரசாணையில் பள்ளிகளின் பட்டியல் பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பார்வை 2ல் காணும் அரசாணையில் 6872 கூடுதல் பட்டதாரி பணியிடங்களுக்கான பாடவாரியான பள்ளி வாரியான பட்டியல் ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. அப்பட்டியலில் திட்டத்தின் சார்பான 6752 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் எவை எனத் தனியாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே, 28 மாவட்டங்களில் தலா 4 சமூக அறிவியல் பாடப் பணியிடங்களும் 4 மாவட்டங்களில் தலா 2 பணியிடங்களும் என மொத்தம் 120 பணியிடங்களைப் பிரித்து மாநில அரசு நிதியிலிருந்து சம்பளம் பெற வேண்டிய பணியிடங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய 6752 பணியிடங்களுக்கு மட்டுமே அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய 120 பணியிடங்களின் பள்ளிவாரியான/பாடவாரியான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கூடுதல் மாநிலத் திட்ட இயக்குநர்

இணைப்பு : 120 பணியிடங்களின் பள்ளிவாரியான / பாடவாரியான பட்டியல்

பெறுநர் :

அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்